# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2021.04.15 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**2000 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)

### 2000 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*முன்னுரை*

2000 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனச் சட்டத்தின்கீழ், கூட்டிணைக்கப்பட்ட இலங்கை போக்குவரத்துப் பட்டய நிறுவனத்தின் இணை உறுப்பினர்கள் சொல்லப்பட்ட நிறுவகத்தின் பெயரை திருத்துவதற்கு தீர்மானமொன்றை நிறைவேற்றியிருப்பதாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட நிறுவனமானது சொல்லப்பட்ட தீர்மானத்திற்கு பயன்கொடுக்கின்ற நோக்கத்திற்கென அத்தகைய நிறுவனத்தின் பெயரைத் திருத்துவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் உசிதமாக இருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2000 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவகச் சட்டத்திற்கான பொதுவான திருத்தம்*

**2**. இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவகச் சட்டத்தில் (அப்பெயரினாலுஞ்சரி அல்லது "இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம்" என்னும் பெயரினாலுஞ்சரி அல்லது நிறுவகம் என்னும் சுருக்கத்தினாலுஞ்சரி) அச்சட்டத்தின்கீழ், வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில் அல்லது வேறு ஆவணத்தில், "இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம்" எனக் குறிப்பிடப்படும் சந்தர்ப்பம் ஒவ்வொன்றிலும் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி, "இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கை பட்டயப் பெயர்ச்சியியல் மற்றும் போக்குவரத்து நிறுவனம்" என்னும் சொல்லமைப்பு இடப்படுதல் வேண்டும்.

*ஒப்பந்தங்கள் முதலியவற்றிற்கான பேணல்கள்*

**3**. இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர், “இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனத்தால்” அல்லது அதற்குச் சாதகமாக ஆக்கப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட எத்தகையது மான ஒவ்வொரு ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும், சான்றிதழ் களும் அல்லது வேறு சாசனங்களும் அல்லது ஆவணங்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன் பின்னர், “இலங்கை பட்டயப் பெயர்ச்சியியல் மற்றும் போக்குவரத்து நிறுவனத்தால்” அல்லது அதற்குச் சாதகமாக ஆக்கப்படவுள்ளதாக, வழங்கப்படவுள்ளதாக, நிறைவேற்றப்படவுள்ளதாக அல்லது ஆக்கப்பட்டுள்ளதாக, வழங்கப்பட்டுள்ளதாக அல்லது நிறைவேற்றப் பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.